


புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2050 | ஆகஸ்டு 29, 2019 | புரட்சி 18 | முழக்கம் 33 | விலை: ரூ.3.00


## சென்னை – விழுப்புரம் – கோபியிலிருந்து பரப்புரைப் பயணம் தொடங்கியது

# பொது மக்கள் பேராதரவு

*‘தமிழ்நாட்டை வஞ்சிக்காதே; சமூக நீதியை பறிக்காதே; புதிய கல்வி என்ற பெயரில் குலக் கல்வியைத் திணிக்காதே; தமிழ்நாட்டை வடநாடாக்காதே!’ என்ற முழக்கங்களுடன் திராவிடர் விடுதலைக் கழகத்தின் 6 முனை பரப்புரைப் பயணங்கள் தொடங்கின.*

**சென்னையிலிருந்து**




சென்னை பரப்புரைக் குழு ஆகஸ்டு 25 காலை 10 மணிக்கு இராயப்பேட்டை பெரியார் சிலையிலிருந்து பயணத்தைத் தொடங்கியது. மே 17, இயக்கத் தோழர்களின்



பறை இசையுடன் நிகழ்வுகள் தொடங்கின. பயணத்தை தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் ஆனூர் ஜெகதீசன், பயணக் குழுவினரை வாழ்த்தி உரையாற்றி கொடி அசைத்துத் தொடங்கி வைத்தார். பொதுச்



செயலாளர் விடுதலை இராசேந்திரன் பயணத்தின் நோக்கங்களை விளக்கிப் பேசினார். சென்னை மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர் துரை, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் பொறுப்பாளர் ரூதர் கார்த்திக் பயணக் குழுவினரை வாழ்த்தி உரையாற்றினர்.

தொடர்ந்து பல்லாவரம், அனகாபுத்தூர், தாம்பரத்தில் பரப்புரை நடந்தது. மக்கள் திரளாகக் கூடி நின்று கருத்துகளைக் கேட்டனர். துண்டறிக்கைகளை விருப்பத்துடன் வாங்கிப் படித்தனர். அனகாபுத்தூரில் பள்ளி மாணவர்கள் திரண்டு வந்து கருத்துரைகளைக் கேட்டனர். கழக வெளியீடுகளும் முதல் நாள் நல்ல விற்பனையானதாக கழகப் பொறுப்பாளர்கள் கூறினர்.

மே 17 இயக்கத் தோழர்களின் பறை இசைக் குழு 25.8.2019 அன்று ஒரு நாள் முழுதும் சென்னைக் குழுவினரின் பரப்புரையில் பங்கேற்று பறை இசைத்தனர். எட்வின் பிரபாகரன், பெரியார் யுவராஜ், நோக்கத்தை விளக்கிப் பேசினர். நாத்திகன் கொள்கைப் பாடல்களைப் பாடினார். மாலை பரப்புரையை முடித்துக் கொண்டு தாம்பரம் பெரும்பாக்கம் சமூகநலக் கூடத்தில் அன்றுமாலை நடந்த கழகத் தோழர் சக்திவேல் இல்லத் திருமணத்துக்கு பயணக் குழுவினர் வந்தனர். சக்தி வேலு-செல்வி இணையரின் மகன் வெற்றிச் செல்வன்-அம்மு சுயமரியாதை மணவிழாவை பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையேற்று நடத்தி வைத்தார். மண விழாவை முடித்துக் கொண்டு பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் ‘தமிழ்க் களத்தில்’ தோழர்கள் இரவு தங்கினர். பொழிலன் தோழர்களை வரவேற்று இரண்டாம் நாள் காலை உணவுக்கு ஏற்பாடு செய்தார்.

**இரண்டாம் நாள்**



சென்னைக் குழுவினரின் இரண்டாம் நாள் பயணம் காலை 10 மணியளவில் முடிச்சூரிலிருந்து தொடங்கியது. படப்பை, வாலாஜாபாத், காஞ்சிபுரத்தில் பரப்புரை நடக்கிறது. காஞ்சிபுரத்தில் மக்கள் மன்றம் ஏற்பாடு செய்த பொதுக் கூட்டத்தில் பேசுகிறார்கள். இரவு காஞ்சி மக்கள் மன்றத்தில் தங்குகிறார்கள். சென்னைக் குழுவில் விரட்டுக் கலைக் குழுவினரின் வீதி நாடக கலை நிகழ்ச்சிகள் இரண்டாம் நாளிலிருந்து தொடங்கின. குழுவுக்கு இரா. உமாபதி பொறுப்பாளராக இருந்து செயல்படுகிறார்.

**விழுப்புரம் குழு**







விழுப்புரம் குழுவினரின் பரப்புரை ஆக. 25 காலை 10 மணியளவில் கடலூர் - மஞ்சைக் குப்பத்திலிருந்து தொடங்கியது. செம்மண்டலம், தூக்கணாம் பக்கம் ஆகிய இடங்களில் பரப்புரையை முடித்து பாக்கம் பகுதியில் மாலை பரப்புரை செய்தனர். இரவு பாக்கத்தில் தங்கினர். தலைமைக் குழு உறுப்பினர் அய்யனார் குழுவுக்கு பொறுப்பேற்று செயல்பட்டு வருகிறார்.

**கோபி குழு**





கோபி பரப்புரைக் குழு ஆக. 25, காலை கோபி பேருந்து நிலையம் அருகிலிருந்து தொடங்கியது. பிரின்ஸ் கஜேந்திர பாபு (ஒருங்கிணைப்பாளர், மக்கள் கல்வி மேடை) பயணத்தைத் தொடங்கி வைத்தார்.

**காவல்துறை திடீர் தடை: பரப்புரைப் பயணம் தள்ளி வைப்பு**

ஆக. 25இல் தொடங்கிய கழகத்தின் பரப்புரைக் குழுக்களுக்கும், ஆக. 26இல் தொடங்கிய பரப்புரைக் குழுக்களுக்கும் காவல்துறை திடீரென அனுமதி மறுத்துள்ளது. எனவே பரப்புரைப் பயணத் திட்டமும் பள்ளிப்பாளையம் நிறைவு விழா மாநாடும் தள்ளி வைக்கப்படுகிறது. புதிய பயணத் திட்டம் விரைவில் அறிவிக்கப்படும்.

**கொளத்தூர் மணி**
கழகத் தலைவர்

**விடுதலை இராசேந்திரன்**
கழகப் பொதுச் செயலாளர்

# 1944இல் சேலம் திராவிடர் கழகப் பெயர் மாற்ற மாநாடு சந்தித்த எதிர்ப்புகள்

*1944ஆம் ஆண்டு ஆகஸ்டு 27ஆம் தேதி சேலத்தில் கூடிய தென்னிந்திய நல உரிமைச் சங்க மாநாட்டில் தான் அமைப்பின் பெயர் திராவிடர் கழகமாக மாற்றப்பட்டது. பெரியார் எழுதி அண்ணாவால் படிக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க அத்தீர்மானம், 'அண்ணாத் துரை தீர்மானம்' என்று வரலாற்றில் அழைக்கப்படுகிறது. பெயர்மாற்றம் மட்டுமல்லாது இயக்கம் பண்பு மாற்றமும் பெற்றது. அதுவரை தேர்தலில் போட்டியிட்டு வந்த தென்னிந்திய நல உரிமைச் சங்கம் அதற்குப் பிறகு தேர்தலில் போட்டியிடாத சமுதாயப் புரட்சி இயக்கமாக மாறியது. 75 ஆண்டுகாலம் நிறைவு பெற்றுள்ளது. 1944ஆம் ஆண்டில் பெயர் மாற்றம் கொண்டு வரப்பட்ட மாநாட்டில் என்ன நடந்தது என்ற வரலாற்றுத் தகவலை 'விடுதலை' நாளேடு 2.9.1944இல் பதிவு செய்துள்ளது. இளைய தலைமுறையின் சிந்தனைக்காக அந்தக் கட்டுரை இங்கே வெளியிடப்படுகிறது.*

16ஆவது தென்னிந்திய நல உரிமைச் சங்க மாநாடு சேலத்தில் நடத்த 1940ஆம் வருஷத்திலேயே திருவாரூரில் அழைக்கப்பட்டது. அதன்பிறகு 43ஆம் வருஷம் சேலத்தில் நிர்வாக சபை கூட்டம் போட்ட காலத்தில் சேலம் சேர்மன் தோழர் ரத்தினம் பிள்ளையவர்களாலும் குகை பிரபல வியாபாரி கே. ஜெகதீசன் அவர்களாலும், வக்கீல் தோழர் நெட்டோ அவர்களாலும் அழைக்கப் பட்டபடி ஒரு வருஷ காலமாக சேலத்தில் நடத்த முயற்சி எடுத்து வந்த மாநாடு 27.08.1944ஆம் தேதி சேலம் விக்டோரியா மார்க்கட்டில் போடப்பட்டிருந்த மாபெரும் கொட்டகையில் ஆடம்பரத் தோடும் ஆரவாரத் தோடும் உற்சாகத்தோடும் உருப்படியான வேலைத் திட்டங்களோடும் வெற்றிகரமாக நடந்த விபரம்:

### பெரியார் வருகை

மாநாட்டுக்கு முதல் நாளாகிய 26ஆம் தேதியே தோழர்கள் சவுந்தரபாண்டியன், அண்ணாதுரை, வி.வி.ராமசாமி, கெ.ஏ.பி. விசுவநாதம் ஆகியவர்களும் பல இடங்களிலிருந்து சுமார் ஆயிரம் பிரதிநிதிகளும் வந்துவிட்டனர். அடுத்த நாள் காலையில் மாநாட்டுத் தலைவர் பெரியார் ஈ.வெ.ராமசாமி அவர்களும் மற்றும் சுமார் 3000 பிரதிநிதிகளும் தமிழ் நாட்டிலுள்ள எல்லா ஜில்லாக்களிலிருந்தும் வந்து கூடிவிட் டார்கள். பெரியார் ஏறிவந்த ரயில் வந்த உடனே ரயில் மேடையில் கொடியுடன் சுமார் 200 தொண்டர்களும் 400, 500 உள்ளூர் மக்களுமாக பெருத்த ஆரவாரத்தோடு பெரியாரை வரவேற்று அவருக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தோழர் ரோசு அருணாசலம் அவர்கள் மாளிகைக்கு வாழ்த் தொலியோடு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அங்கு சென்று சிற்றுண்டி அருந்தியதும் தோழர் பாண்டியன் அவர்களும், தோழர் அண்ணாதுரையவர்களும் தலைவர் இருந்த ஜாகைக்கு வந்து தீர்மானங்களைப்பற்றி பேசி "குடிஅரசு", "திராவிட நாடு" பத்திரிகைகளில் வெளிவந்த தீர்மானங்களில் பட்டம் பதவி விடுதல் என்ற தீர்மானங்கள் தவிர மற்ற தீர்மானங்கள் எல்லாராலும் ஒப்புக்கொள்ளப் படுகிறதென்றும் தெரிவித்ததோடு பட்டம் பதவி விடுகிற தீர்மானத்திலும் ஒரு சிறு திருத்தத்தோடு அதை அப்படியே ஒப்புக்கொள்வதில் யாருக்கும் எவ்வித ஆட்சேபனையில்லையென்றும் தெரிவதாகவும் தெரிவித்ததோடு இத்திருத்தத்தோடு எல்லாத் தீர்மானங்களும் மாநாட்டில் நிறைவேற்றும் விஷயத்தில் யாவரும் கட்டுப்பாடாக ஒருவருக்கொருவர் ஒத்துழைக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

### ஊர்வலப் புறப்பாடு

ஊர்வலத்தில் இரட்டைக் குதிரை பூட்டிய பெரியதொரு கோச்சு வண்டியில் பெரியார், பாண்டியன், வரவேற்புக் கழகத் தலைவர் மூவரும் மாலையிட்டு அமர்த்தப்பட்டனர். பிறகு மாநாட்டுத் திறப்பாளரும், கொடியேற்றுபவருமாகிய தோழர்கள் கே.ஏ.பி.விசுவநாதம், பி. பாலசுப்பிரமணியம் ஆகியவர்களும் வண்டியில் உட்கார வைக்கப்பட்டார்கள். அந்த சமயத்தில் பொது ஜனங்கள் பலர் ஆட்சேபனைக் குறிகள் காட்டினார்கள் என்றாலும் பெரியார் கேட்டுக் கொண்டதின் பேரில், ஆட்சேபனை குரல்கள் அடங்கி விட்டன. ஊர்வலத்திற்கு தொடங்கிய இடத்திலேயே சுமார் 20000 மக்கள் போல் கூடிவிட்டார்கள். கோச்சு வண்டிக்கு முன்னால் ஜனங்கள் ஒரு பர்லாங்கு தூரம் வரையிலும் நெருக்கமாக நிறைந்திருக்க, 5 ஜதை பாண்டு செட்டுகளும், 10 ஜதை மேளம், 100 ஜதை தப்பட்டை, 40 கொம்புகளும், தொண்டர்கள் ஏறிய 40 குதிரைகளும், 2 யானைகளும் முன்செல்ல, 10.30 மணிக்கு ஊர்வலம் புறப்பட்டது.

ஊர்வலம் புறப்பட்டு கடைவீதிக்குள் வருவதற்குள் ஊர்வலத்தில் கலந்து கொண்ட ஜனங்களின் எண்ணிக்கை ஒன்றுக்கு இரண்டு பங்காய்விட்டது. இதில் முக்கியமாய் குறிப்பிடத் தக்கது பெண்கள் ஆயிரக்கணக்கில் ஊர்வலத்தில் கலந்துகொண்டதும், திருச்சி, பொன்மலை முதலிய ஊர்களி லிருந்து வந்த தொண்டர் படைகள் தங்கள் தங்கள் கொடி சின்னங்களுடன் தனித்தனியாக அணிவகுத்துச சென்றது மாகும். ஊர்வலத்தில் வழி நெடுக மாலையிட்டார்கள். தஞ்சாவூர் திராவிட சுயமரியாதைத் தோழர்களால் பெரியாரே எங்கள் தலைவர் என்றும் சூழ்ச்சி யாவும் வீழ்ச்சியடைக என்றும் பொறிக்கப் பட்ட துண்டுப் பிரசுரங்கள் பதினாயிரக்கணக்கில் வழங்கப்பட்டன. வழி நெடுக பெரியார் வாழ்க, திராவிடர் கழகம் ஓங்குக, பாண்டியன் வாழ்க, துரோகிகளும் சதிகாரர்களும் அயோக்கியர்களும் அழிக என்ற உற்சாகக் குரல்கள் காது செவிடுபடத் செய்தன. ஊர்வலம் சுமார் 11.30 மணிக்கு மாநாட்டுக் கொட்டகையை வந்தடைந்தது. ஊர்வலம் வருவதற்கு முன்னமேயே கொட்டகையில் ஆயிரக்கணக்கான பேர்கள் நிறைந் திருந்தார்கள். தோழர் அண்ணாதுரை அவர்கள் மாநாட்டுக் கொட்டகையில் நுழைந்தபோது பெருத்த ஆரவாரம் செய்தார்கள். பெரியார் அவர்கள் பெரும் கஷ்டத்துடன் பெரும் கரகோஷத்தினிடையே மேடைக்கு அழைத்து வரப்பட்டார்கள்.

### கூர்க்க சிப்பாய்கள் நீக்கம்

பிரதிநிதிகள் தியாகராயப் பந்தலுக்குள் நுழைவதில், கொட்டகை வாயிலில் நேப்பாளத்திய கூர்க்க சிப்பாய்களை வைக்கப்பட்டிருந்ததில், அவர்களோடு சச்சரவு ஏற்பட்டதும் அதன் பயனாய் பெருத்த கலவரம் ஏற்பட்டதுடன் உயிர்க் கொலையும் ஏற்படும்படியான அளவுக்கு ஆத்திரம் ஏற்பட்டு விட்டது! தோழர் அண்ணாதுரை அவர்களின் அதி தீவிர முயற்சியினால் குழப்பம் ஒரு வழியில் அடக்கப்பட்டது. கூர்க்கக் காவலாளிகள் எல்லாம் அப்புறப்படுத்தப்பட்டார்கள். இது கொட்டகைக்குள் பிரதிநிதிகளை தாராளமாகச் செல்ல விடாமல் தடுப்பதற்காக செய்யப்பட்ட தந்திரம் என்று பலருக்கும் தோன்றியதாலேயே பிரதிநிதிகள் வெறி கொண்டுவிட நேர்ந்தது என்றுதான் சொல்லவேண்டும். அதன் பயனாக மாநாட்டைக் கூட்டியவர்களுக்கும் பழி யேற்பட நேர்ந்தது.

### கொடியேற்றல் பிரதிநிதிகள் ஆட்சேபனை

மாநாடு கூடினதும் மாநாட்டுக் காரியதரிசி தோழர் நெட்டோ அவர்கள் தோழர் பாலசுப்ரமணியம் அவர்களை கொடியேற்றி வைக்கும்படி பிரேரேபித்தார். சொன்ன உடனே பிரதிநிதிகள் கூட்டத்தில் இதில் எழுத முடியாத பலவிதமாக கெட்ட வார்த்தைகளும் மறுப்பு ஆட்சேபனைகளும் கிளம்பின. உடனே வரவேற்புக் கழகத் தலைவர் சேர்மன் தோழர் ரத்தினம் பிள்ளை வந்து சமாதானமாக, இந்த மாநாட் டின் பலனாய் நம் கட்சியில் ஒரு சின்ன மனிதனுக்காவது எவ்வித அபிப்பிராயபேதத்திற்கும் சிறிதும் இடமில்லாமல் எல்லோ ரையும் அழைத்திருக்கிறோமேயல்லாது மற்றப்படி வேறு எந்த விதமான எண்ணங்கொண்டும் நாங்கள் தோழர் பாலசுப்பிரமணியம் முதலியார்களை தருவிக்கவில்லை என்றும் அவர்கள் மிக்க ஒழுங்காகப் பேசி நேர்மையாக நடந்து கொள்வார்களென்றும் சொல்லி கொடியேற்றுவதை ஆதரித்தார். பெரியார் அவர்களும் ஆத்திரப்பட்டவர்களுக்கெல்லாம் கையமர்த்தி கேட்டுக்கொள்வதின் மூலம் சமாதானம் சொல்லி யாதொரு கலவரமும் இல்லாமல் இருக்கும்படி வேண்டிக் கொண்டார்.

பிறகு தோழர் பாலசுப்பிமணிய முதலியார் சிறிது நேரம் ஆங்கிலத்தில் பேசினார். (அது பின்னால் வரும்) பேச்சு முழுவதும் சரணாகதி பேச்சாகவும் தன்னுடைய நடவடிக்கைக்கு மன்னிப்புக் கேட்டுக் கொள்வதாகவும், தானும் தன் பின் சந்ததியும் என்றென்றும் பெரியார் தலைமையில் தொண்டாற்றுவோம் என்றும், நான் பெரியாருக்கு ஓய்வு கொடுப்பதற்கு ஆகவே வேறு எந்தெந்த ஆள்களுடைய பெயர்களை தலைமை ஸ்தானத்திற்கு குறிப்பிட்டேனோ அவர்கள் எல்லாம் குறிப்பாக சர். ஆர்.கே. சண்முகம் செட்டியார் முதலியவர்கள் எல்லாம் கட்சிக்கு துரோகிகளாய் விட்டார்கள் என்றும், பெரியார் தமிழ்நாட்டின் காரல்மார்கஸ் என்றும் ஏராளமாகப் புகழ்ந்து பேசியதோடு அவரிடத்தில் நான் குறை கண்டதாக சொல்வதெல்லாம் இன்னும் அதிகமாக வேலை செய்ய வேண்டும் என்று ஊக்கப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தைக் கொண்டேயென்றும் வேறு எந்தவிதமான குறை அவரிடத்தில் கண்டதில்லையென்றும் சொன்னதோடு பெரியாரே என்றென்றும் தலைவராயிருந்து திராவிடஸ் தான் வாங்கிக் கொடுத்து அதில் அவரே முதல் பிரசிடெண்டாக இருக்கவேண்டும் என்று விரும்புகிறேன் என்றும் அதற்காக தாம் எல்லாவிதமான தியாகங்கள் செய்யத் தயாராயிருப்பதாகவும் தெரிவித்தார். மற்றும் தோழர் பாலசுப்பிரமணியம் அவர்கள் நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க சங்கதி என்னவென்றால், ஊர்வலத்தில் பெரியாருடன் வண்டியில் உட்காந்திருக்கும்போது தோழர் பாலசுப்பிரமணியத்துக்கு போடுவதற்காகக் கொண்டுவந்த மாலைகள் எல்லாவற்றையும் இரண்டு கையில் வாங்கி எழுந்திருந்து பெரியாருக்கு அணிவித்து பொது மக்களுக்கு, தான் பெரியாரின் அடிமை என்பதுபோல் காட்டிக் கொண்டதாகும். தோழர் பாலசுப்பிரமணியம் அவர்கள் பேச்சு ஆங்கிலத்தில் முடிந்த உடனே, தோழர் க. அன்பழகனால் அது தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

### திறப்பு விழா

பின் மாநாட்டைத் திறந்துவைக்கும்படி தோழர் கே.ஏ.பி. விசுவநாதத்தைக் கேட்டுக் கொண்டார்கள். தோழர் விசுவ நாதம் அவர்கள் பேச எழுந்த போதும் சிறிது எதிர்ப்புக் குறி காணப்பட்டதென்றாலும் அது உடனே பெரியார் செய்கையால் அடக்கப்பட்டது. தோழர் விசுவநாதம் அவர்கள் பேசியதும், சற்றேறக்குறைய தோழர் பாலசுப்பிரமண்யம் பேசியது போலவேயிருந்தாலும் பெரியார் சர்வாதிகாரியாய் இருப்பதைக் கூட தான் ஆதரிப்பதாகவும் பேசி, சாமர்த்தியமான முறையில் சாடைமாடையாக சில கிண்டல் சொல்லையும் சொல்ல ஆசைப்பட்டார். கூட்டத்திலுள்ளவர்களில் சில பிரதிநிதிகள் ஒருமையில் பேசி எச்சரிக்க ஆரம்பித்தவுடன் மறுபடியும் பெரியாருக்குப் புகழ்மாலை சூட்டுவதில் முனைந்து விட்டார்!

அது முடிந்ததும் வரவேற்புக் கழகத் தலைவர் சேர்மன் தோழர் ரத்தினம் பிள்ளையவர்கள் வரவேற்புச் சொற் பொழிவை நிகழ்த்தினார். அது பெரும்பாலும் பெரியாரைப் புகழ்ந்தும் அவரைத் தவிர வேறு தலைவர் திராவிடர்களுக்கு கிடையாதென்றும் ஒற்றுமையை வலியுறுத்தியும் திராவிட நாட்டுப்பிரிவினையை ஆதரித்தும் கட்சிக் கட்டுப்பாடுகளை வலியுறுத்தியும் பேசப்பட்டதாகும். பின்னர் பெரியார் அவர்களைத் தலைமை வகிக்கும்படி பிரரேபித்தார்.

தோழர்கள் நெட்டோ, பாண்டியன், ராமாமிர்தத்தம்மாள், ராவ்சாகிப் துரைசாமி பிள்ளை, கணேசசங்கரன், திருவொற் றியூர் டி. சண்முகம் ஆகியவர்கள் ஆதரித்தார்கள். தோழர் சண்முகம் அவர்கள் பேசும்போது, தோழர்கள் பாலசுப்பிர மணியம், விசுவநாதம் ஆகியவர்கள் பேசியபடி நடந்து கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் பேசிய பேச்சை ஞாபகத்தில் வைத்துக் கொள்கிறார்களா அல்லது தங்கள் வழக்கம் போல் நடக்கிறார்களா பார்ப்போம் என்றும் வெளியில் போனதும் பழையபடி கர்ணம் போடக் கூடாதென்றும் எச்சரிக்கை செய்து, யார் தானாகட்டும் இன்றைய நிலையில் பெரியாரைத் தவிர வேறு யார் பெயரை பிரேரேபிக்கத் தயாராயிருக்கிறீர்கள் என்று கேட்டுவிட்டு ஆதரித்தது குறிப்பிடத் தக்கதாகும்.

பின், பெரிய ஆரவாரத்துடனும், வாழ்த் தொலியுடனும், நீண்ட கைத்தட்டலுடனும் பெரியார் நீண்ட சொற்பொழிவாற்றினார்.

●

# அசல் நகலில் இடம் பெற்ற சமஸ்கிருத திணிப்பு கொள்கை சுருக்கப்பட்ட நகலில் மறைக்கப்பட்டது ஏன்?

***ஜூலை 12, 2019 அன்று கோவை அண்ணாமலை அரங்கில் கோவை திராவிடர் விடுதலைக் கழகம் ஏற்பாடு செய்த கருத்தரங்கில் புதிய கல்வித் திட்ட நகல் குறித்து கல்வியாளர் பிரின்ஸ் கஜேந்திரபாபு நிகழ்த்திய உரை:***

*தேசிய கல்வி வரைவு என்பதை கிட்டத்தட்ட 5 ஆண்டு காலமாக நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். 2015லிருந்தே மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகம் பள்ளிக் கல்வியிலேயே ஒரு 20 தலைப்புகள், உயர் கல்விக்கு ஒரு 13 தலைப்புகள் என்று தலைப்புகள் கொடுத்து, இந்த தலைப்புகளின் மீது கருத்துக்களைச் சொல்லுங்கள் என்று மனித வளத் துறை வலைதளத்தில் அறிவிப்பை வெளியிட்டிருந்தார்கள். இந்தியா முழுவதும் உள்ள மாவட்டங்களில் இது சம்மந்தமாக கூட்டங்கள் நடத்தப்போகிறோம், அனைத்து உயர்கல்வி இடங்களிலும் கூட்டம் நடத்தப்போகிறோம், கிராமங்கள் அளவிற்கு எத்தனை கூட்டங்கள் நடத்தப் போகிறார்கள் என்று ஒரு கணக்கை போட்டு வைத்திருந்தார்கள். அவர்கள் குறிப்பிட்ட பாதி அளவான இலக்கை கூட அதாவது 50 சதவீதத்தை கூட அவர்களால் அடைய முடியவில்லை.*

*நாம் இதே கோயம்புத்தூரில், இதே அண்ணா மலை அரங்கத்தில் கூட்டம் போட்டிருக்கிறோம்; இன்னும் பல்வேறு கோயம்புத்தூர் பகுதிகளில் கூட்டம் போட்டிருக்கிறோம். அப்போது நாம் அந்த மக்களை பார்த்து கேட்டோம்! தேசிய கல்விக் கொள்கையைப் பற்றி கருத்து கேட்டார்களாமே நீங்களெல்லாம் கருத்து கூறினீர்களா? என்று கேட்டோம். அப்படி கருத்து கேட்டதே தெரியாது என்று தான் பெரும்பகுதி மக்கள் கூறினார்கள். கோவையில், கன்னியாகுமரியில் தமிழ்நாடு முழுக்கவே பல்வேறு மாவட்டங்களில் உள்ள மக்களிடம் அவர்களுக்கே தெரியாமல் எப்படி கருத்து கேட்டிருப்பார்கள்? ஆவணத்தில் இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள், ஆவணத்தில் எப்படி வரும்? மக்களுக்கே தெரியாமல் எப்படி கருத்து கேட்டிருக்க முடியும்? என்ற கேள்வியெல்லாம் எழுந்தது. அந்த கருத்துக்களையெல்லாம் தொகுத்து, அதை உள்வாங்கித்தான் மறைந்த டி.எஸ். சுப்ரமணியம் தலைமையில் இருந்த குழு ஒரு அறிக்கையை தந்ததாகச் சொன்னார்கள். அந்த அறிக்கையை இந்திய அரசு பகிரங்கமாக வெளியிடவே இல்லை. அவரேகூட சொன்னார், நீங்கள் வெளியிடவில்லையென்றால் நானே வெளியிடுவேன் என்று சுப்பிரமணியன் கூட சொன்னார். அவர்கள் ஏன் அந்த அறிக்கையை வெளியிடவில்லை? ஏன் அவர்கள் அந்த அறிக்கையை விவாதத்திற்கு உட்பத்தவில்லை என்று புரிந்து கொள்ளமுடியவில்லை.*

*அதற்குப் பிறகு அவர்கள் என்ன செய்தார்களென்றால் ஒரு 43 பக்கத்திலே தேசிய கல்விக் கொள்கை 2016 வரைவுக்கான உள்ளீடுகள் என்று வெளியிட்டார்கள்.* (some inputs for national educational policy draft 2016) *அது இன்னும் கூட மனித வள மேம்பாட்டென்ற வலைதளத்தில் ஆவணமாக இருக்கிறது. அந்த 43 பக்கம் கொண்ட ஆவணம் வெளியிடப்பட்ட வுடன் அது நம் மத்தியில் மிகப்பெரிய பயத்தை ஏற்படுத்தியது. பல்வேறு சந்தேகங்களை நம் மத்தியில் ஏற்படுத்தியது. எனவே தமிழ்நாடு, இந்தியா முழுவதும் போராட்டம் நடைபெற்றது. இவ்வாறான உள்ளீடுகள் இருக்க முடியாது இது வடிகட்டும் முறை என்று. எதிர்ப்புகள் வந்தன. அந்த போராட்டத்தினுடைய விளைவாக அவர்கள் என்ன சொன்னார்களென்றால், வரைவு இன்னும் முழுமையடையவில்லை இன்னொரு கமிட்டி அமைக்கவுள்ளோம், என்று கூறினார்கள். அந்த கமிட்டி தான் மரியாதைக்குரிய கஸ்தூரி ரங்கன் குழு!*

*இப்போது நமக்கு என்ன தெரிய வருகிறது என்றால், தற்போது மனித வள மேம்பாட்டென்ற வலைதளத்தில் ஜூன் மாதம் 1ஆம் தேதி கஸ்தூரி ரங்கன் அவர்களுடைய அறிக்கை வருகிறது. அந்த 484 பக்கம் கொண்ட அறிக்கையில் அவர் முதல் பக்கத்தில் கையெழுத்து போட்டுள்ளார். அறிக்கை முடிந்தது. அரசிடம் ஒப்படைப்பதற்கான கடிதம், அந்த கடிதத்தில் கையெழுத்து இட்ட நாள் டிசம்பர் 15, 2018. அப்போது டிசம்பர் 15, 2018இல் இந்த அறிக்கை தயாராகிவிட்டதென்று நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. தயாரான இந்த அறிக்கை, மே மாதம் 31 ஆம் தேதி வரைக்கும் ஏன் அரசு கைகளுக்கு வரவில்லை? அரசு பெறவில்லையா? அவர் கொடுக்கவில்லையா? இதற்கான விளக்கத்தை யாரும் சொல்லவில்லை. ஜூன் மாதம் 1ஆம் தேதி ஆங்கிலத்திலும், இந்தியிலும் வெளியிட்டுவிட்டு*




*தமிழ், குஜாராத்தி, மராத்தி உள்ளிட்ட இந்தியாவில் உள்ள அனைத்து மக்களும் இந்த அறிக்கைக்கு கருத்து சொல்லுங்கள் என்று கூறுகிறார்கள். அந்த கருத்து சொல்வதற்கான கால அவகாசம் 30 நாள் என்றார்கள். தமிழ்நாட்டைச் சார்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் ஒரு கையெழுத்துப் போட்டு மனு கொடுக்கிறார்கள். மதுரை நாடாளுமன்ற உறுப்பினர், மாநிலங்களவை உறுப்பினரையும் கூட அழைத்துக்கொண்டு அவர் தனியாக ஒரு மனுவை கொடுக்கிறார். அந்த மனுவில், இந்த கல்வி கொள்கையில் ஏற்க முடியாதான அம்சங்கள் என்னென்ன இருக்கு, பாதிப்புகள் எவ்வளவு இருக்கிறது என்பதை குறிப்பிட்டு, எனவே இந்திய மக்கள் இதை படித்துவிட்டு கூற வேண்டுமென்றால், இந்த 484 பக்கங்களையும் தமிழ் மொழியில் மொழிபெயர்த்து தர வேண்டும். மொழி பெயர்த்து கொடுப்பது மட்டுமல்ல, குறைந்தபட்ச ஆறு மாத கால அவகாசம் கொடுக்க வேண்டுமென்று மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சரிடம் மனு கொடுத்தார்கள். அதற்கு முன், தொல் திருமாவளவன், இரவிக்குமார் அதற்கு முன் 42 பேர் கையெழுத்துப்போட்ட கடிதத்தையும் கொடுத்து விட்டு வருகிறார்கள். கால அவகாசத்தை நீட்டிக்க வேண்டும் என்று. இந்த இரண்டு கடிதத்தின்போது நாடாளுமன்றத்தில் சில உறுப்பினர்கள் கேள்வி எழுப்புகிறார்கள். அதற்கு பின் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், ஜூலை மாதம் 31 ம் தேதி வரைக்கும் நீட்டிக்கப்படும் என்று கூறியிருக் கிறார்கள். அதற்கு பின்பு சமீபத்தில் மனிதவள மேம்பாட்டுத் துறையில், 51 பக்கத்தில் ஒரு சுருங்கிய வடிவத்தை கொடுத்திருக்கிறார்கள். 484 பக்கத்தின் 'சுருக்கம்'* (shorter form) *என்று , கொடுத்திருக் கிறார்கள். இந்த சுறுக்கம்தான் 12 இந்திய மொழிகளில் மொழி பெயர்த்து, மனிதவள மேம்பாட்டுத்துறை வலைதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.*

*484 பக்கம் கொண்ட முக்கிய ஆவணத்தில் இருக்கக்கூடிய செய்திக்கும், இந்த 51 பக்கத்தில் உள்ள செய்தியையும் கவனித்தோமென்றால் சில முக்கியமான இடங்களில் சில வேறுபாடுகள் தெரிகிறது. குறிப்பாக தாய்மொழிதான் தொடக்கக் கல்வியில் கற்பித்தல் மொழியாக இருக்குமென்று 51 பக்க சுருக்கத்தில் கூறியிருக்கிறார்கள். இது தான் நமது கோரிக்கை இது வந்தால் மிகப்பெரிய மகிழ்ச்சி. ஆனால், 484 பக்க அறிக்கையில் என்ன கூறுகிறார்கள்? வாய்ப்பு கிடைக்கும்போது என்ற வார்த்தையை பயன்படுத்துகிறார்கள். தொடக்கக் கல்வியில் கூட தாய்மொழிக் கல்வி இருக்குமென்பதை அவர்களால் உறுதியாக சொல்ல முடியவில்லை. இப்போது நான் 51 பக்கம் சுருக்கத்தை நம்புவதா? அல்லது 484 பக்க அறிக்கையை நம்புவதா?*

*பிரதான அறிக்கையில் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், சமஸ்கிருதம் இந்தியாவில் உள்ள இந்திய மொழிகளின் வளர்ச்சிக்கு அளப்பரிய பணி செய்திருக்கிறது. இந்திய நாட்டினுடைய ஒருமைப்பாட்டிற்கு அது அளப்பரிய பணி செய்திருக்கிறது. எனவே சமஸ்கிருதத்தை தொடக்க கல்வியிலிருந்து உயர் கல்வி வரைக்கும் நன்றாக கற்று கொடுப்பதற்கான அனைத்து வசதிகளும் செய்து கொடுக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். ஆனால், இந்த 51 பக்க சுருக்கத்தில் ஒரு பக்கத்தில் கூட சமஸ்கிருதம் என்ற வார்த்தையே வரவில்லை. இப்போ நான் 51 பக்கத்தை வைத்து கருத்து சொல்வதா? இல்லை 484 பக்கத்தை வைத்து கருத்து சொல்வதா?*

*அதே போல் பள்ளிக்கல்வி மற்றும் உயர்கல்வி பற்றிய முக்கிய அம்சங்கள் மட்டும் சுருக்கத்தில் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் பாதிப்பு எப்படி இருக்கும்? பாதிப்பை நான் முழுதாக புரிந்து கொண்டால் தானே பதில் சொல்ல முடியும். நான் மேம்போக்காக புரிந்து கொண்டு எப்படி பதில் சொல்ல முடியும். அனைவரும் கேட்கக் கூடிய கேள்வி என்னவென்றால் புதியதாக ஒன்று வரும் போது ஏன் எதிர்க்கிறீர்கள் என்று? புதியதாக வரவேண்டுமென்றால் அது என்னவென்பது தான். இந்திய நாட்டு மக்களின் கோரிக்கை என்ன? கட்டணமில்லா கல்வி கொடு என்பது தான் நாட்டு மக்களின் கோரிக்கை. அது இன்றைய கோரிக்கையா? மகாத்மா ஜோதிராவ் புலே, சாவித்திரி பாய் புலே: சூத்திரர்களுக்கும், ஆதி சூத்திரர்களுக்கும் அதிலும் குறிப்பாக பெண்களுக்கும் எந்த சமூகத்தில் பிறந்திருந்தாலும், காலம் காலமாக இந்தியாவிலே கல்வி மறுக்கப்பட்டிருக்கிறது. ஹன்டர் ஆணையம் முன்பு 1882இல் மகாத்மா ஜோதிராவ் பூலே தனது கோரிக்கையை வைக்கிறார். அப்படி வாய்ப்பு மறுக்கப்பட்ட சமூகங்களுக்கு சமமான கல்வியை அரசு கொடுக்காமல் வேறு யார் கொடுப்பது என்று தனது கோரிக்கையை முன் வைக்கிறார். ஜோதிராவ் பூலே சமர்பித்த அந்த ஆவணத்தை படிக்காமல் இந்திய நாட்டினுடைய கல்வி வரலாற்றை நாம் நிச்சயமாக புரிந்து கொள்ள முடியாது. யாருக்கு கல்வி வேண்டும்? யாருக்கு கல்வி மறுக்கப்பட்டது? அப்படி கல்வி மறுக்கப்பட்ட சமூகத்திற்கு கல்வி தர வேண்டும் என்றால் அந்த பொருப்பை யார் ஏற்க வேண்டும்? சென்னை அடையாறில் ஆல்காட் பள்ளி என்று இன்றும் இருக்கிறது. அயோத்திதாசரின் வாழ்க்கை வரலாற்றை படிக்காமல் கல்வியைப் பற்றி நீங்கள் பேச முடியாது. அயோத்திதாசர் கர்னல் ஆல்காட் உடன் சேர்ந்து உருவாக்கியது தான் ஆல்காட் பள்ளி. ஏன் அப்படியொரு பள்ளியை உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது? திருவனந்தபுர சமஸ்தானத்திலே ஒடுக்கப்பட்ட மக்களுடைய கல்விக்காக அய்யன்காளி நடத்திய போராட்ட மிருக்கிறதே! அய்யன்காளி நடத்திய போராட்டத்தை படிக்காமல் நாம் கல்வி வரலாற்றை பேச முடியாது. ஒரு வரலாற்றுப் பார்வை இல்லாமல் ஒரு அறிவியல் அனுகுமுறை சாத்தியமாகாது. அறிவியல் அனுகுமுறைக்கு வரலாற்றுப் பார்வை வேண்டும். ஆனல், இந்த 200 ஆண்டுகளுக்கு மேல் இந்தியாவில் சமமான கற்றல் வாய்ப்பு வேண்டும் என்று நடந்த வரலாறுகளைப் பற்றி இந்த ஆவணம் எந்த பதிவையும் செய்யவே இல்லை. 484 பக்கம் கொண்ட இந்த ஆவணம் எதையும் செய்யவே இல்லை.*

*காந்தியடிகள் வார்தாவிலே நடந்த மாநாட்டிலேயே என்ன முன்வைத்தார்கள்? அப்போது கல்வியை பற்றி பேசும் போது தேசப் பிதா மகாத்மா காந்தியடிகள் என்ன கோரிக்கையை வைத்தார்கள் என்று தெரிய வேண்டாமா? பிரிட்டிஷ்காரர்கள் 23 வயதில் பகத்சிங்கை தூக்கிலிடுகிறார்கள். பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் தூக்கிலிடபட்டபோது, ஏன் அந்த தண்டனையை ஏற்றார்கள்? எங்களுடைய தண்டனை இந்திய நாட்டின் மக்களுடைய மனசாட்சியாக இருக்கும் குறிப்பாக இளைஞர்களுடைய மனசாட்சியை உலுக்கும், இந்திய நாட்டினுடைய விடுதலையின் வேள்வியிலே அவர்கள் பங்கேற்பார்கள். அந்த மகத்தான போராட்டம் இந்திய நாட்டிற்கு விடுதலை பெற்றுத் தரும். விடுதலை இந்தியாவிலே ஒரு மாணவன் கல்வி கிடைக்கவில்லை என்று ஏங்கிக் கொண்டிருக்க மாட்டான், ஒரு குழந்தை உணவு, பால் இல்லையென்று ஏங்கிக்கொண்டிருக்காது, படித்த இளைஞன் வேலை இல்லையென்று திண்டாட மாட்டான். இது மூன்றும் இல்லாத இந்தியா தானே பகத்சிங்கின் கனவு! 70 ஆண்டுகாலம் கழித்து நீங்கள் கொடுக்கக்கூடிய கல்விக் கொள்கையினால், விடுதலை போராட்ட வீரர்களான பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகியோரின் கனவு நனவாகிறதா என்று தானே நான் பார்ப்பேன் அது நினைவாகிறா? அண்ணல் அம்பேத்கர் அவர்கள் அரசமைப்புச் சட்டத்தை உருவாக்குகிற போது, 14 வயதுக்குட்பட்ட அத்தனை குழந்தைகளுக்கும் இலவசக் கட்டாயக் கல்வியைக் கொடுப்பது அரசின் கடமை, பெறுவது குடிமக்களின் உரிமை என்று சொல்லப்பட்டது. ஆனால் அவ்வாறு கொடுக்க முடியாது. இந்தியாவினுடைய பொருளாதாரம் அனுமதிக்கவில்லை என்று கூறினீர்கள். எப்போது? 1949இல் நவம்பர் 26 இந்திய அரசமைப்புச் சட்டம் எழுதி முடிக்கும் தருவாயில் அப்படி கூறினீர்கள்.*

*அரசினுடைய பொருளாதாரம் வளருமே யானால், மேம்படுமேயானால், இலவச கட்டாயக் கல்வி தருவோம். அரசினுடைய பொருளாதாரம் மேம்படவில்லை அதற்காக கல்வியை அடிப்படை உரிமையாக்க முடியாது என்று கூறினீர்கள். இப்போது 2019. இப்போதும் பொருளாதாரம் மேம்படவில்லையா? பொருளாதாரம் மேம்படும் போது கட்டாய இலவசக் கல்வியை அனைவருக்கும் வழங்குவோம் என்று கூறியவர்கள், இப்போது இந்த கல்வித் திட்ட அறிக்கையில் ஏன் அது பற்றி ஏதும் கூறவில்லை?*

*(தொடரும்)*

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# ‘பெரியாரின் வேர்களைத் தேடி’ தஞ்சையில் மூன்று நாள் கருத்தரங்கு








***தஞ்சையிலுள்ள அன்னை வேளாங்கன்னி கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் காட்சி தொடர்பியல் துறையும் ‘ரிவோல்ட்’ அமைப்பும் இணைந்து மூன்று நாள் பன்னாட்டு மாநாட்டை ஆகஸ்டு 23, 24, 25 தேதிகளில் நடத்தியது. ‘ஊடகங்களில் பகுத்தறிவு மற்றும் சமூக நீதியின் வேர்களைத் தேடி’ எனும் தலைப்பில் நடந்த கருத்தரங்கில் ஆய்வாளர்கள், கல்வியாளர்கள், சூழலியாளர்கள் பங்கேற்றுப் பேசினர்.***

முதல் நாள் : ஆகஸ்டு 23 முதல் நாள் காலை அமர்வுக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை தாங்கினார். பசு. கவுதமன் வரவேற்புரையாற்ற பேராசிரியர் ந. முத்துமோகன் முதன்மை உரையாற்றினார். பேராசிரியர் மு. நாகநாதன், புலவர் செந்தலை கவுதமன், இரா. எட்வின், சுப. குணராசன், முனைவர் தமிழ் காமராசன், சூழலியல் ஆய்வாளர் நக்கீரன் உரையாற்றினர். மனித நேயர் எஸ்.எஸ். ராஜ்குமார், ஆய்வு விமர்சனத்துடன் நெறிப்படுத்தினார்.

இரண்டாம் நாள் அமர்வில் மருத்துவர் ஷாலினி, ‘பெரியாரின் பெண்ணியம்’ என்ற தலைப்பில் முதன்மை உரை நிகழ்த்தினார். பேராசிரியர் முனைவர் இந்திரா, அமந்தா, ஓவியா, அன்பு மொழி ஆகியோர் ‘பெரியார் பார்வையில் பெண்ணியம்’ குறித்துப் பேசினர். ‘திராவிடர் கருத்தியலும் தமிழ் இலக்கியமும்’ எனும் தலைப்பில் நிகழ்ந்த இரண்டாம் அமர்வில், பொ. வேல்சாமி, முனைவர் தெ. வெற்றிச் செல்வன், முனைவர் இரா. சுப்ரமணியம், பேராசிரியர் மணி, கோ. பன்னீர் செல்வம், பேராசிரியர் இரா. காமராசு, பேராசிரியர் வீ. அரசு உரையாற்றினர். மாணவர்களின் குறும்படங்கள், ஆய்வுப் படங்கள் திரையிடப்பட்டன.

மூன்றாம் நாள் : ‘பெரியார்-கலை பண்பாட்டுத் தளத்தில்’ என்ற தலைப்பில் நடந்த மூன்றாம் நாள் அமர்வுக்கு கோவை இராம கிருட்டிணன் தலைமை தாங்கினார். பேராசிரியர் சரோன்பென்னி, சீனி. விடுதலை அரசு உரையாற்றினர். டிரஸ்கி மருது வெளி நாட்டிலிருந்து காணொளி வழியாக பேசினார். ‘அறியப்படாத பெரியாரின் தத்துவப் பெருவெளியில்’ என்ற தலைப்பில் நடந்த அமர்வில் எழுத்தாளர் பாமரன், இரா. கண்ணன் (அய்.நா. அமைப்பின் அரசியல் ஆலோசகர்) உரையாற்றினர். தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எஸ். பழனி மாணிக்கம் தலைமை தாங்கினார்.

## திருப்பூர்- கோவையில் விநாயகர் சதுர்த்தி நடைமுறைகளைப் பின்பற்ற வலியுறுத்தி மனு



விநாயகர் சதுர்த்தியின் போது கடைபிடிக்க வேண்டிய சட்ட நடைமுறைகள் அடங்கிய விண்ணப்பம் திருப்பூர் மாவட்ட ஆட்சியரிடம் திராவிடர் விடுதலைக் கழகத் (திருப்பூர் மாவட்டம்) தோழர்களால் 19.08.2019 அன்று காலை 10 மணிக்கு அளிக்கப்பட்டது. விநாயகர் சதுர்த்தியின் போது கடைபிடிக்க வேண்டிய சட்ட நடைமுறைகள் அடங்கிய விண்ணப்ப படிவத்தை தொடர் புடைய அதிகாரிகளிடம் வழங்கி நடைமுறைபடுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. கழக பொருளாளர் துரைசாமி, மாவட்ட தலைவர் முகில் இராசு, முத்து, அய்யப்பன் ஆகியோர் சென்றிருந்தனர்.

விநாயகர் சதுர்த்தி ஊர்வலம் - சிலை அமைப்பது தொடர்பாக - சென்னை உயர்நீதிமன்றத்தின் (WP No 25586/2004. Dt.17.09.2004) வழிகாட்டுதல்-தமிழக அரசின் பொது (சட்டம் மற்றும் ஒழுங்கு) துறையின் அரசாணை எண் 598, நாள் 09.08.2018 நிபந்தனைகளை விதி முறைகளை செயல் படுத்தக் கோரி திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் 21.08.2019 அன்று கோவை மாநகர காவல் ஆணையாளர், கோவை மாவட்ட கண்காணிப்பாளர் ஆகியோரிடம் நேரில் கோரிக்கை மனு அளித்து வற்புறுத்தப் பட்டது.




## வெளிவந்து விட்டது
### ‘நிமிர்வோம்’ – ஆகஸ்டு 2019 இதழ்




மற்றும் பெரியார் சிந்தனைகளுடன்...

தனி இதழ் விலை : ரூ.20

தொடர்புக்கு: நிர்வாகி, 95, டாக்டர் நடேசன் சாலை, அம்பேத்கர் பாலம், மயிலாப்பூர், சென்னை-600 004.

தொலைபேசி எண்: 044 24980745 / 7299230363 / 7373684049

www.dvkperiyar.com/nimirvomdvk@gmail.com

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 29th August 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN